**இரணைமடு நீர்ப்பாசன அபிவிருத்திச் செயற்திட்டம் (ஜடீபீ) - 2014**

இரணைமடு நீர்ப்பாசன அபிவிருத்திச் செயற்திட்டத்தின் 2014 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் கமத்தொழில் அபிவிருத்திக்கான சர்வதேச நிதியத்திற்கும் இடையேயான 2012 ஜனவரி 30 ஆந் திகதிய 1-857 ஆம் இலக்க நிதியளிப்பு உடன்படிக்கையின் IX அத்தியாயத்தின் 9.03 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்பிரையில் உள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளிப்பு, காலம் என்பன

நிதியளிப்பு உடன்படிக்கையின் பிரகாரம், மாகாண சபைகள் மற்றும் பிராந்திய அபிவிருத்தி அமைச்சு தற்போதைய மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்று முகவர் ஆகும். செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவர்கள் வட மாகாணத்தின் மாகாண நீர்ப்பாசன திணைக்களமும் மாகாண கமத்தொழில் திணைக்களமும் ஆகும். நீர்ப்பாசன கட்டமைப்பின் ஆக்கபூர்வமானதும் நிலைத்து நிற்க கூடியதுமான முகாமைத்துவத்தை ஊக்குவித்து நீர் மற்றும் காணிகளது உற்பத்தித் திறனை நிலைத்து நிற்குமாறு அபிவிருத்தி செய்வதே செயற்திட்டத்தின் நோக்கமாகும். நிதியளிப்பு உடன்படிக்கையின் படி, செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 3,812.6 மில்லியனுக்கு சமனான 29.32 மில்லியன் அமெரிக்க டொலர்கள் ஆனதுடன், அதில் ரூபா 2891 மில்லியனுக்கு சமனான 22.23 மில்லியன் அமெரிக்க டொலர்களை நிதியளிப்பதற்கு கமத்தொழில் அபிவிருத்திக்கான சர்வதேச நிதியம் உடன்பட்டிருந்தது. இதனை விட, ரூபா 160 மில்லியனுக்குச் சமனான 1.23 மில்லியன் அமெரிக்க டொலர்களை தனியார் துறை அமைப்புக்கள் மூலம் நிதியளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளதுடன் ரூபா 351 மில்லியனுக்கு சமனான 2.70 மில்லியன் அமெரிக்க டொலர்களை நலனாளிகளால் நிதியளிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. செயற்திட்டமானது அதனது நடவடிக்கைகளை 2012 சனவரி 30 ஆந் திகதி ஆரம்பித்திருந்ததுடன் 2017 மார்ச் 31 ஆந் திகதியளவில் நிறைவு செய்ய பட்டியல்படுத்தப்பட்டுள்ளது.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு ஏற்ப நான் கணக்காய்வை மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய

கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டு மொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தின் நிதிசார் கூற்றுக்களில் காணப்பட்ட செலவினம் செயற்திட்டத்தால் பேணப்பட்ட உயரளவு நிதிசார் அறிக்கைகள் மற்றும் செயன் முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக கணக்கிணக்கம் செய்யப்பட்டுள்ளனவா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈ) கடன் மற்றும் மானிய உடன்படிக்கைகளில் குறிப்பிடப்பட்ட தேவைகளுக்கு ஏற்ப மீளளிப்பிற்கான விண்ணப்பங்களை ஆதரிக்குமாறு நியாயபூர்வமாக நம்பிக்கை அளிக்கக்கூடியனவா என்பதும்,

(உ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் நிதியளிப்பு உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட விதப்புரைகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(ஊ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பதும்,

(எ) செயற்திட்டத்தின் அமுல்படுத்தலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்

(ஏ) நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு ஏற்ப தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஐ) எனது முன்னைய ஆண்டுக் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களைத் திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஒ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

------------------------

### 2.1 அபிப்பிராயம்

--------------------

இது வரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப் பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய, இவ்வறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களால் எழும் சீராக்கல்களை தவிர,

(அ) செயற்திட்டமானது 2014 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு அமைய 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதி அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈ) கடன் மற்றும் நிதியளிப்பு உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்ட தேவைகளுக்கு ஏற்ப மீளளிப்பிற்கான விண்ணப்பங்களை ஆதரிக்குமாறு நியாயபூர்வமாக நம்பிக்கை அளிக்கக்கூடியனவாக இருந்தன என்றும்,

(ஈ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களைத் திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(உ) நிதியளித்தல் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகிறேன்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இடைக்காலக் கொடுப்பனவுகளிலிருந்து 52 சந்தர்ப்பங்களில் கழித்துக்கொள்ளப்பட்ட தடுத்து வைத்த தொகையாகிய ரூபா 20,031,272 செயற்திட்டத்தின் பொறுப்பாக உணரப்படாது போனமையால், 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நடைபெறும் வேலையினது பெறுமதியும் கொடுப்பனவு செய்ய வேண்டிய தடுத்து வைத்த தொகையும் அதேயளவு தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தன.

(ஆ) ஒப்பந்தகாரர்கள் மூலமாக ரூபா 942,204 கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்ட தளபாடங்களும் உபகரணங்களும் சொத்துக்கள், பொறித்தொகுதி, உபகரணம் ஆகியவற்றின் கீழ் காட்டப்படுவதற்குப் பதிலாகத் தவறுதலாக சிவில் வேலைக் கிரயமாகக் கவனத்திற்கொள்ளப்பட்டிருந்தது.

## 3. நிதி மற்றும் பௌதீகச் செயலாற்றல்

### 3.1 நிதிப் பயன்பாடு

கிடைக்கப் பெற்ற தகவல்களின் படி, மீளாய்வாண்டிற்கான நிதியளிப்பு மற்றும் வரவு, செலவுத் திட்ட நிதியேற்பாடு, மீளாய்வாண்டின் போதிலானதும் 2014 திசெம்பர் 31 வரையிலான நிதியப் பயன்பாடு என்பவற்றின சில குறிப்பிடத்தக்க புள்ளி விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

**நிதிப் பயன்பாடு**

| மூலம் | நிதியளிப்பு உடன்படிக்கைப் பிரகாரம் நிதியளிப்பிற்கு உடன்பட்ட தொகை | | 2014 வரவு, செலவுத் திட்ட மதிப்பீட்டில் உள்ள நிதியேற்பாடு | மீளாய்வாண்டின் போது | | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு |
|---|---|---|---|---|---|---|
| | அமெரிக்க டொலர் (மில்லியன்) | ரூபா (மில்லியன்) | ரூபா (மில்லியன்) | ரூபா (மில்லியன) | அமெரிக்க டொலர் (மில்லியன்) | ரூபா (மில்லியன்) |
| ஐஎவ்ஏடீ | 22.23 | 2,891 | 600 | 438.60 | 5.68 | 738.92 |
| இலங்கை அரசாங்க உதவு தொகை | 3.16 | 410 | 90 | 52.60 | 0.70 | 90.55 |
| நலன்பெறுநர்களின் பங்களிப்பு | 2.70 | 351 | - | - | - | - |
| தனியார் துறை உதவி | 1.23 | 160 | - | - | - | - |
| மொத்தம் | 29.32 | 3,812 | 690 | 491.20 | 6.38 | 829.47 |

**3.2 பௌதிக முன்னேற்றம்**

-----------------------------------

கிடைக்கப் பெற்ற தகவல்களின் பிரகாரம், 25 பொதிகளின் கீழ் செயற் திட்டத்தால் வழங்கப்பட்ட 8 ஒப்பந்தங்களது சிவில் நிர்மாண வேலைகள் 2014 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு முடிவடைந்திருந்தன. அத் தினத்தில் உள்ளவாறு 17 ஏனைய பொதிகளின் கீழ் நடைபெற்றவாறிருந்த நிர்மாண வேலைகளது பௌதீக முன்னேற்றம் 18 முதல் 90 சதவீதம் வரையில் அமைந்திருந்தன. மேலும், செயற்திட்ட முடிவுக் காலப்பகுதிக்கு முன்னர் சிவில் நிர்மாண வேலைகளை முடிப்பதற்கு இயலுமானவாறு மாதாந்த, காலாண்டு, அரையாண்டு ரீதியில் நிதி மற்றும் பௌதிக இலக்குகளை உள்ளடக்கியவாறான விரிவான செயல் திட்டம் ஒன்றை செயற்திட்டம் தயாரித்து அமுல்படுத்தப்படாதிருந்தது.

**3.3 ஒப்பந்த நிர்வாகம்**

--------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) சிவில் நிர்மாண வேலைகளுக்கு உசாத்துணைப் பொறியியலாளர் ஒருவரை ஆட்சேர்ப்பதற்கு செயற்திட்டத்தின் நிதியளிப்புத் திட்டத்தில் ரூபா 19.23 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தபோதும், செயற்திட்டத்தால் நிறைவேற்றப்பட்ட வேலையின் தரத்தை உறுதிப்படுத்துவதற்கு அவ்வாறானதொரு உசாத்துணையாளர் செயற்திட்டத்தில் வேலைக்கமர்த்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) செயற்திட்டத்தால் புனர் நிர்மாணம் செய்யப்பட்ட வாய்க்கால்கள் மற்றும் குளங்களின் ஊடாகவும் பாதுகாக்கப்பட்ட பிரதேசங்களுக்கு ஊடாகவும் இரண்டாம் நிலை காடழிப்புக்கான பிரமாண – வேலைகளை விவசாய ஸ்தாபனங்கள் தத்தமது பிரதேசங்களில் நிறைவேற்றியிருந்தபோதும், 02 ஆம் 12 ஆம் பொதிகளின் கீழ் பரந்தன் பிரதான வாய்க்காலைப் புனரமைக்கும் பிரதான வேலையில் ஈடுபட்ட ஒப்பந்தகாரர்கள் 14 ஆம் பொதியின் கீழ் திரியாறு பிரதான வாய்க்காலின் விநியோக வாய்க்காலைப் புனரமைத்தல், 23 ஆம் பொதியின் கீழ் உரியன் வாய்க்காலின் வலது கரை விநியோக வாய்க்காலைப் புனரமைத்தல் போன்றவற்றிற்கு ரூபா 1,218,266 கூட்டுத் தொகையைக் கோரி விண்ணபித்து அதற்கான கொடுப்பனவுகளைச் செயற்திட்டம் வழங்கியிருந்தது.

(இ) 2015 ஆகஸ்ட் 21 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட தளப் பரிசோதனையின் போது 23 ஆம் பொதியின் கீழ் உரியன் வாய்க்காலின் வலது கரை விநியோக வாய்க்கால் புனரமைப்பில் ஈடுபட்ட ஒப்பந்தகாரர்களுக்கு மண் நிரப்பும் நடவடிக்கைகளை நேரடியாக அளவிடாது ரூபா 3,284,130 கூட்டுத்தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. மேலும், செயற்திட்டத்தின் 02 ஆம் பொதியின் கீழ் புனரமைக்கப்பட்ட பரந்தன் பிரதான வாய்க்காலின் மதகு வெகுவாகப் பாதிப்படைந்திருந்தமையும் தளப்பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

## 3.4 தொடர்பற்ற செலவினம்

---------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வடமாகாண சபையின் நீர்பாசனத் திணைக்களத்தினது வருடாந்த வரவு, செலவுத்திட்ட மதிப்பீட்டில் போதியளவு நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதும், திணைக்களத்திற்குச் சொந்தமாக வாகனங்களைப் பழுதுபார்ப்பதற்குச் செயற்திட்டத்தால் ரூபா 1,119,080 தொகை செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) ஒப்பந்தகாரால் வேலைக்கமர்த்தப்பட்ட தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஒருவருக்கு ரூபா 307,973 சம்பளத்தைச் செயற்திட்டம் வழங்கியிருந்தமை அவதானிக்கப்பட்டது.